**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 58 of 2024**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **DW1–திரு.முருகேசன்** | **கிராமம்:** | |
| **த.பெ.** | **திரு.காளியண்ணன்** | **வேலை:** | |
| **வயது** | **63** | **செல்போன் எண்** | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் முருகேசன், வயது 63, த/பெ. காளியண்ணன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

**1) 21.09.2019– Proforma Invoice & Statements (ஜெராக்ஸ்)**

**2) 02.01.2020– வாதி நிறுவன ஆடிட்டர் வழங்கிய முன்தொகை ரூ.86,00,000/–க்கு சான்று (அசல்)**

**3) 14.03.2020 to 17.04.2021 – Tax Invoice and Statement எண்ணிக்கை–22 (ஜெராக்ஸ்)**

4) 21.05.2024– நாமக்கல் கிளை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி ஸ்டேட்மெண்ட் (20.03.2020 to 27.12.2023) – (அசல்)

5) 06.02.2025– ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நாமக்கல் கிளை சேலம் ரோடு வங்கி ஸ்டேட்மெண்ட் (09.06.2017) (சான்றொப்பமிட்ட நகல்)

6) 05.02.2025– யூனியன் பேங்க் ஆப் இந்தியா நாமக்கல் கிளை தில்லைபுரம் வங்கி ஸ்டேட்மெண்ட் (01.04.2018 – 31.03.2019) (சான்றொப்பமிட்ட நகல்)

7) 06.02.2025– தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி நாமக்கல் கிளை வங்கி ஸ்டேட்மெண்ட் (04.12.2019 – 31.12.2019) (சான்றொப்பமிட்ட நகல்)

8) 16.09.2025– யூனியன் பேங்க் ஆப் இந்தியா நாமக்கல் கிளை தில்லைபுரம் வங்கி ஸ்டேட்மெண்ட் (17.12.2019 – 08.09.2020) (சான்றொப்பமிட்ட நகல்)

மேற்கண்ட நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்களில் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.4, 5, 6, 7, 8 ஆகிய ஆவணங்கள் முறையே <u>பி.வா.சா.ஆ.2 முதல் 6 ஆக</u> வாதி தரப்பில் ஆவண ஏற்பு மற்றும் மறுப்புரையில் தெரிவிக்கப்பட்டிருந்த ஆட்சேபனைகளுக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது, நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண். 1, 3 ஆகியவை புகைப்பட நகலாக இருந்ததால் அவை குறியீடு செய்ய ஏற்கப்படவில்லை.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் B.E. Civil Engineering படித்துள்ளேன்.

Yazhini Yarn Mills என்ற நிறுவனமானது கடந்த 2020–2021 ஆண்டுகளில் துவங்கப்பட்டது, அதை நான் நடத்தி வருகிறேன்.

Yazhini Yarn Mills நிறுவனத்தின் GST பதிவானது கடந்த 04.09.2018 என்று இடம் பெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான், GST பதிவு அப்போது செய்யப்பட்டது.

உங்களுடைய தொழில் தொடங்கப்படுவதற்கு முன்பே GST பதிவு செய்து விட்டீர்களா என்றால் அவ்வாறுதான் நடைமுறை உள்ளது.

உங்களுக்கு வாதியால் 22 இன்வாய்ஸ்களின் அடிப்படையில் supply செய்யப்பட்ட machineries இறக்குமதி செய்யப்பட்ட second hand machineries என்றால் proforma invoice–ல் உள்ள பட்டியல் எந்திரங்களில் ஒன்று முதல் நான்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எந்திரங்கள், பட்டியலில் உள்ள ஐந்து, ஆறு எந்திரங்கள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எந்திரங்கள்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எந்திரங்கள் எவை எவை என்றும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எந்திரங்கள் எவை எவை என்றும் உங்களுடைய எதிர்வழக்குரையில் நீங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான், குறிப்பிடவில்லை.

Proforma invoice–இல் உள்ளபடி நீங்கள் எந்திரங்கள் வாங்குவதற்கு வாதியிடம் order கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரிதான்.

Proforma invoice–இல் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்குதான் வாதியிடமிருந்து எந்திரங்கள் வாங்குவதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் சரிதான், ஒப்புக்கொண்டேன்.

Proforma invoice ஆவணத்தை வங்கியில் கொடுத்து தான் வங்கியில் இருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தீர்கள் என்று சொன்னால் சரிதான், என்னோடு பிரதிவாதியும் உடன் வந்து இருவரும் சேர்ந்து தான் வங்கியில் கொடுத்தோம்.

வங்கி அதிகாரிகளும் எந்திரங்களை சரிபார்த்துவிட்டுதான் loan sanction செய்தார்கள் என்றால் இல்லை.

நீங்கள் வா.சா.ஆ.5–ல் குறிப்பிட்டுள்ளவாறு 01.04.2019 தேதியில் 41 லட்சம் ரூபாய் நீங்கள் வாதியிடம் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், நான் பணம் கொடுத்துள்ளேன், ஆனால் வேறு வேறு தேதிகளில் கொடுத்தேன்.

வேறு வேறு தேதிகளில் மொத்தமாக 41 லட்சம் ரூபாய் பணம்தான் நீங்கள் கொடுத்தீர்கள் என்றால் சரிதான், வங்கி கணக்கு வாயிலாக செலுத்தினேன்.

17.12.2019 அன்று வாதிக்கு ரூபாய் 10 லட்சம் செலுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், வங்கி மூலமாக செலுத்தினேன்.

18.12.2019 அன்று 20 லட்சம் ரூபாய் தலா 10 லட்சமாக வாதியின் வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

19.12.2019 அன்று 5 லட்சம் ரூபாய் வாதிக்கு வங்கி கணக்கில் செலுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

மேற்கண்ட 76 லட்ச ரூபாய் தான் நீங்கள் முன்பணமாக வாதிக்கு செலுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் 86 லட்ச ரூபாய் செலுத்தியுள்ளேன்.

நீங்கள் முன்பணமாக ரூபாய் 86 லட்சம் செலுத்தியதாக கூறுகிறீர்கள், ஆனால் அவ்வாறு நீங்கள் வாதிக்கு ரூபாய் 86 லட்சம் செலுத்தியதற்கான ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன்.

சாட்சியிடம் பி.வா.சா.ஆ.3 ஆவணம் காண்பிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 10 லட்சத்தையும் சேர்த்து தான் நீங்கள் வாதிக்கு இதுவரை 86 லட்ச ரூபாய் பணம் செலுத்தியதாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரிதான்.

பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரூபாய் 10 லட்சம் தொகை அனுப்பப்பட்டதற்கான UTR எண் sbiin217160249528 என்ற வங்கி பரிவர்த்தனை மூலமாக தான் அனுப்பப்பட்டது என சாட்சியிடம் ஆவணம் காண்பித்து கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்து சரி என ஆமோதித்தார்.

நீங்கள் வாதி நிறுவன உரிமையாளர் திரு.பரமசிவத்திற்கு ரூபாய் 25 லட்சம் கொடுத்து அவர் உங்களுக்கு ஒரு அடமான ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அந்த அடமானத் தொகைக்காக ரூபாய் பத்து லட்சம் நீங்கள் அவருக்கு RTGS வாயிலாக செலுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை, நான் பணமாக தான் கொடுத்தேன்.

நீங்கள் பணமாக தான் அவருக்கு கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

Ex.A.6 அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள UTR மூலமாக தான் ரூபாய் 10 லட்சம் அனுப்பியதாக உள்ளது, அந்த UTR எண்ணும், Ex.B.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள UTR எண்ணும் ஒன்றுதான் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் வாதிக்கு தனிப்பட்ட அடமானக் கடனாக கொடுத்த ரூபாய் 10 லட்சத்தையும் எந்திரம் வாங்குவதற்காக கொடுத்த 10 லட்சம் என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல,

நான் MOD செய்து கொடுத்தது பரமசிவத்திற்கும், 10 லட்ச ரூபாய் பணம் அனுப்பியது பத்மஸ்ரீ இன்ஜினியரிங் நிறுவனத்திற்கும் அனுப்பியுள்ளேன்.

எனவே நீங்கள் வாதி நிறுவனத்திற்கு ரூபாய் 76 லட்சம் தான் இதுவரை நீங்கள் முன்பணமாக கொடுத்துள்ளீர்கள், 86 லட்ச ரூபாய் முன்பணமாக கொடுக்கவில்லை அவ்வாறு கொடுத்திருப்பதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல, ஆடிட்டர் 86 லட்ச ரூபாய் செலுத்தப்பட்டதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுக் கொடுத்துள்ளார்.

ஆடிட்டர் உங்களிடம் நேரடியாக கொடுத்தாரா என்று சொன்னால் இல்லை, பத்மஸ்ரீ இன்ஜினியரிங் நிறுவனத்திற்காக என்னிடம் வாங்கி கொடுத்தார்கள்.

Ex.B.1 ஆவணம் உங்களால் தயாரிக்கப்பட்ட ஆவணம், வாதியின் ஆடிட்டர் உங்களுக்கு தரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Ex.B.1 ஆவணத்தை நிரூபிப்பதற்கு அது வழங்கியதாக கூறும் ஆடிட்டரை இவ்வழக்கில் சாட்சியாக கொண்டுவரவில்லை என்று சொன்னால் சரிதான், கொண்டுவரவில்லை.

உங்கள் வங்கி கணக்கு வாயிலாக வாதி நிறுவனத்திற்கு இதுவரை ரூ.1,25,00,000/- மட்டுமே எந்திரங்களுக்காக செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, ரூபாய் 1,29,44,107/- செலுத்தப்பட்டுள்ளது. ரூ.4,44,107/- வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க வாதி தெரிவித்த வங்கி கணக்கிற்கு வங்கியால் தொகை அனுப்பப்பட்டுள்ளது.

எந்திரங்களுக்காக ரூ.1,25,00,000/- தான் வாதி நிறுவனத்திற்கு உங்களால் வங்கி மூலமாக செலுத்தப்பட்டுள்ளது, அது தவிர கூடுதலாக எந்த தொகையும் செலுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

19.09.2019 தேதியில் நீங்கள் கூறிய அந்த தொகை ரூ.4,44,107/— அனுப்பப்படவில்லை, வாதி வங்கி கணக்கிற்கும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல, வாதி தெரிவித்த வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வாதி உங்களை வேறொரு வங்கிக் கணக்கிற்கு தொகை எதுவும் இதுவரை அனுப்பக் கூறியது இல்லை, அவ்வாறு அவர் கூறியதாக உங்களுடைய எதிர்வழக்குரையிலும் இல்லை, இது குறித்து உங்களது சாட்சியமானது ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் இதுவரை வாதிக்கு ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக தொகையாக கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள், ஆனால் அவ்வாறு தொகையாக கொடுத்ததற்குரிய எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன், tax invoice தான் நான் பணம் செலுத்தியதற்கான ரசீது.

நீங்கள் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக பணமாக வாதிக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் அந்தத் தொகை யார் மூலமாக, எப்போது, யார் முன்னிலையில் கொடுத்தீர்கள் என்று வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் மிஷனரி வாங்கும் போது தொகை கொடுத்து தான் வாங்கினேன்.

உங்களுடைய எதிர்வழக்குரையில் அவ்வாறு machinery வாங்கும்போது பணம் கொடுத்து விட்டு தான் machinery வாங்கினேன் என்று நீங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் மொத்த தொகை செலுத்தியதை என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன்.

ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான தொகை செலுத்தியதை குறித்து எதிர்வழக்குரையில் நீங்கள் குறிப்பிடவில்லை, தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் இவ்வழக்கில் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக பணமாக வாதிக்கு செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளீர்கள், அவ்வாறு நீங்கள் தொகையாக ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் ஒருவருக்கு கொடுத்தால் வருமான வரி சட்டப்படி அது தவறானது, அவ்வாறு நீங்கள் செலுத்தியதாக கூறும் அந்த தொகைக்கு வருமான வரி செலுத்த தயாராக இருக்கிறீர்களா என்று சொன்னால் வருமான வரி கணக்கில் நான் அதை குறிப்பிட்டுள்ளேன், வருமான வரி செலுத்தவும் தயாராக இருக்கிறேன்.

நீங்கள் வருமான வரி செலுத்தியதாக சொல்லும் அந்த வருமான வரி கணக்கினை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

உங்கள் கணக்கை சரி செய்வதற்கு வாதிக்கு செலுத்த வேண்டிய தொகைகளை கொடுக்காமல் இருப்பதற்காக பொய்யான கணக்குகளை தெரிவித்து இவ்வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் நாமக்கல்லுக்கு வாதியிடமிருந்து எந்திரங்கள் வாங்கி அதை வாதி நாமக்கல்லுக்கு வந்து உங்களுக்காக அந்த எந்திரங்களை வாதி தான் உங்களுக்கு கோவையில் வைத்து சோதனை செய்து அதை கழற்றி பின்னர் நாமக்கல்லில் வந்து நிறுவி கொடுத்துள்ளார் என்று சொன்னால் தவறு, dismantle, loading, fixing செய்வதற்கு நான்தான் ஆட்களை வைத்து பணிகள் மேற்கொண்டேன், அந்த பணிகளை மேற்பார்வையிடுவதற்காக ஒரு மேற்பார்வையாளரை மட்டும் தான் வாதி அனுப்பி வைத்தார்.

நீங்கள் கூறுவது தவறு, வாதி தான் எந்திரங்களை உங்களுக்கு நாமக்கல்லில் வந்து நிறுவி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

வெளிநபர்கள்தான் எந்திரங்களை உங்களுக்காக நிறுவி கொடுத்தார்கள் என்று இவ்வழக்கில் ஆதாரங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் கேட்கவில்லை, நானும் கொடுக்கவில்லை.

நீங்கள் உங்களுக்கு வாதியால் அனுப்பி வைக்கப்படும் எந்திரங்களை இறக்கி வைப்பதற்காக மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1,50,000/– வாதி உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று சொன்னால் எந்திரங்கள் இறக்கி வைப்பதற்காக அவர் எனக்கு அனுப்பவில்லை, AC வாங்குவதற்காக அவரிடம் பணம் கொடுத்து இருந்தேன், அந்த எந்திரங்கள் வாங்குவதற்கான தொகை போக இருந்த மீதி தொகையை அவர் எனக்கு அனுப்பி வைத்தார்.

ரூ.1,50,000/– மேற்சொன்னவாறு AC வாங்கியதற்கு தான் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது என்று இவ்வழக்கில் ஆதாரம் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வாதி கூறியது போல் நீங்கள் எந்திரங்களை கையாளுவதற்கான தொகையாக தான் வாதி உங்களுக்கு ரூ.1,50,000/– கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

ரூ.4,72,55,200/– வாதி நிறுவனம் உங்களுக்கு செலுத்தியுள்ளதாக கூறியிருப்பதற்கு இவ்வழக்கில் ஏதாவது ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ரூ.4,72,55,200/– வழங்கியுள்ளார் என்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எந்த ஆவணம் என்றால் அவர்தான் அவருடைய வழக்கில் ரூ.4,72,55,200/- அவ்வாறு குறிப்பிட்டிருந்தார், அதை நான் ஏற்றுக் கொண்டேன்.

ரூ.3,18,27,099/- தொகை தான் நீங்கள் வாதிக்கு எந்திரங்கள் வாங்கிய செலவினங்களுக்காக கொடுக்க வேண்டிய தொகை, அதில் நீங்கள் ரூ.2,01,00,000/- தான் இதுவரை செலுத்தியுள்ளீர்கள், மீதி தொகையினை நீங்கள் வாதிக்குக் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் அது பொய்.

இந்த வழக்கிற்கு தொடர்பற்ற உங்களுக்கும் வாதிக்கும் இடையே உள்ள தனிப்பட்ட கணக்குகளையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

19.09.2020 தேதியில் ரூ.61,266/- மற்றும் ரூ.3,82,851/- ஆகிய தொகை அனுப்பப்பட்டதாக Ex.B.2 வங்கி கணக்கு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது, அந்த தொகை எதுவும் வாதியின் வங்கி கணக்கிற்கு வரப்பெறவில்லை, வாதியின் வங்கி கணக்கில் அந்த தொகை வந்ததாக ஆதாரங்கள் எதையும் இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ரூபாய் 95,00,000/- வாதிக்கு நீங்கள் தொகை செலுத்தியதற்கு உரிய ஆதாரத்தை வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்வதாக தெரிவித்துள்ளீர்கள், அவ்வாறு இதுவரை நீங்கள் 95 லட்சம் ரூபாய் தொகையினை வாதிக்கு செலுத்தியதாக ஆதாரங்கள் எதையும் வழக்கில் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் வங்கி கணக்கு அறிக்கை கொடுத்துள்ளேன்.

வங்கி கணக்கு அறிக்கைகள் உங்களுடைய தனிப்பட்ட வங்கி கணக்கு அறிக்கைகள் தான், அதற்கும் வாதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

உங்களுக்கு வாதிக்கும் ஏற்கனவே கடன் வரவு செலவுகள் இருந்தது என்று சொன்னால் சரிதான்.

MOD Ex.A.6 ஆவணத்திற்கான கடன் முழுவதையும் வாதி செலுத்தி நீங்கள் அந்த MOD ரத்து செய்து விட்டீர்கள் என்று சொன்னால் 09.09.2020 தேதியில் ரத்து செய்து கொடுத்து விட்டேன்.

நாமக்கல்லில் தாக்கல் செய்துள்ள காசோலை மோசடி வழக்கிற்கும், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உங்களுக்கும் வாதிக்கும் இடையே நடக்கும் மற்றொரு வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான், சம்பந்தமில்லை.

அந்த வழக்குகளில் உள்ள பரிவர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வழக்கில் நீங்கள் வாதிக்கு செலுத்த வேண்டிய தொகை குறித்தான விசாரணையை திசை திருப்பப் பார்க்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

வங்கியில் உங்களுக்கு எவ்வளவு தொகை sanction ஆனாலும் பாக்கி தொகையினை நீங்கள் தான் செலுத்த கடமைப்பட்டவர், நீங்கள் தான் செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் வாதியால் உங்களுக்கு எந்தெந்த எந்திரங்கள் வரப்பட்டுள்ளது, எந்தெந்த எந்திரங்கள் வராமல் இருந்தது, எந்தெந்த உதிரி பாகங்கள் வரவில்லை உள்ளிட்ட விபரங்களைக் குறிப்பிட்டுக் கூறவில்லை என்று சொன்னால் proforma invoice இல் குறிப்பிட்டவாறு

எந்திரங்களை அவர் எனக்குக் கொடுத்து விட்டார், நான் அதை வாங்கிவிட்டேன்.

இவ்வழக்கில் நீங்கள் கொடுத்துள்ள வாக்குமூலங்கள் வாதிக்கு நீங்கள் செலுத்த வேண்டிய தொகையை தவிர்ப்பதற்காக தான் என்று சொன்னால் சரியல்ல.

17.04.2021 தேதியிட்ட tax invoice இல் உள்ளவாறு over head cleaner machinery ஏற்கனவே கொடுத்திருந்தது கோளாறு ஏற்பட்ட காரணத்தினால் தான் அதை மாற்றி 17.04.2021 அன்று மற்றொரு எந்திரமானது வாதியால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு, இந்த எந்திரமானது தனியாக நான் பணம் கொடுத்து வாங்கினேன்.

17.04.2021 தேதியிட்ட எந்திரத்திற்கான தொகையும் நீங்கள் இதுவரை வங்கி மூலமாகவோ அல்லது பணமாகவோ செலுத்தவில்லை என்று சொன்னால் தவறு, செலுத்தி விட்டேன்.

வாதிக்கு வழக்கில் வாதி கோரியுள்ளவாறு பாக்கி தொகையை நீங்கள் செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.